திரு. மீ. கலியாணசுந்தரம் : சில ராஜ்யங்களில் தளர்த்தப்பட்டாலும் மதுவிலக்கு ரத்தாகாது என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் நம்முடைய அண்டை ராஜ்யங்களிலே சில இடங்களில் மதுவிலக்குச் சட்டமே கிடையாது. அதனாலே நம்முடைய ராஜ்யம் பாதிக்கப்படுகிறது. இதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சில ராஜ்யங்களில் தளர்த்தப்படுகிறது என்று சொன்னேன். மகாராஷ்டிரா மாநிலத்தில் நம்முடைய மாநிலத்தைக்காட்டிலும் கண்டிப்பான முறையைக் கையாண்டு வந்தார்கள். அது இப்பொழுது அங்கே தளர்த்தப்பட்டிருக்கிறது. இது தொல்லே கொடுப்பது உண்மைதான். ஆனால், அதைப்பற்றி இந்த மாநிலம் ஒன்றும் செய்யமுடியாது. இதையெல்லாம் கவனித்து எவ்வளவு கண்டிப்பாக இருக்கமுடியுமோ அவ்வளவு கண்டிப்பாக இருந்து வருகிறோம்.

திரு. மு. கருணாநிதி : மதுவிலக்கு அமலில் இருக்கின்ற காரணத்தால் நாடகம், திரைப்படம், இவைகளிலே "மது அருந்தலாம்" என்று அழிவுரை கூறுகின்ற காட்சிகள் வந்தால் அவை தடைசெய்யப்படுகின்றன. ஆனால் "கள் வேண்டுவோர் கழகம்" என்ற ஒரு கழகம் மதுவேண்டும் என்று பிரச்சாரம் செய்து வருகிறது. அப்படிச் செய்வது சட்டத்திற்குப் புறம்பானது அல்லவா ? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டத்திற்குப் புறம்பானதுதான். ஆனால், ஜனநாயகத்தின் பேரில் அவர்கள் சில உரிமைகள் கோருகிறார்கள்.

அனாதைக் குழந்தைகள்

*130 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964–65-ல் பெற்றோர்களால் நிராகரிக்கப்பட்டு, ஆறு, வாய்க்கால் போன்ற இடங்களில் விட்டுச்செல்லப்பட்ட குழந்தைகள் எத்தனை, மாவட்டவாரியாக ?

(இ) அவைகளுள், எடுத்துக் காப்பாற்றப்பட்டவை, இறந்துபோன பின் கண்டு பிடிக்கப்பட்டவை முறையே எத்தனை, மாவட்டவாரியாக ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) : வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் ஆறு குழந்தைகள் அவற்றின் பெற்றோர்களால் நிராகரிக்கப்பட்டு ஆற்றோரங்களில் விட்டுச் செல்லப்பட்டனர். இவ்வாறு விட்டுச்செல்லப்பட்ட ஆறு குழந்தைகளில் ஒன்று உயிருடன் இருக்கிறது. மற்றவை இறந்துவிட்டன.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, இந்த அனாதைக் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக, பெற்று விடப்பட்டுக்கிடக்கிற சிசுக்களைக் கவனிப்பதற்காக, அரசாங்கமே முன்வந்து ஹாஸ்டல் மாதிரி, ஒரு விடுதி கட்ட முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே இதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஸ்தாபனங்களுக்கு பெற்று விடப்படுகின்ற அனாதைக் குழந்தைகள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

அம்மை நோய்

*131 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனம் நகரத்தில் 1965 ஜூலை முதல் டிசம்பர் முடிய அம்மை நோயால் இறந்தவர்கள் எத்தனை பேர் ?